**செய்தி வெளியீடு எண்: 167** **நாள்: 28.02.2020**

**இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு 1.3.2020 (ஞாயிற்றுக் கிழமை) அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்.**

இராமநாதபுரம் ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், 1.3.2020 (ஞாயிற்றுக் கிழமை) அன்று காலை 10.00 மணிக்கும், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில், 1.3.2020 (ஞாயிற்றுக் கிழமை) அன்று மாலை 3.00 மணிக்கும் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அடிக்கல் நாட்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விரண்டு விழாக்களிலும், மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்கள் தலைமையேற்பார்கள். இரண்டு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அடிக்கல் நாட்டியும், மாவட்டங்களில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்தும், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் விழாப் பேருரையாற்றுவார்கள். இவ்விரண்டு விழாக்களிலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலை வகிப்பார்கள். இராமநாதபுரத்தில் நடைபெறும் விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் சிறப்புரையாற்றுவார்கள். விருதுநகரில் நடைபெறும் விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களும், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களும் சிறப்புரையாற்றுவார்கள். இவ்விரண்டு விழாக்களிலும், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றுவார்கள். மேலும், இவ்விழாக்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி, புது தில்லி அவர்கள், செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, அரசு தலைமைக் கொறடா, தலைவர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தலைவர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசுத் துறை உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள். இராமநாதபுரத்தில் நடைபெறும் விழாவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.கோ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்களும், விருதுநகரில் நடைபெறும் விழாவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இரா.கண்ணன், இ.ஆ.ப., அவர்களும் செய்து வருகிறார்கள்.

----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**